பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.எல்

மலர்: 16] சென்னை: ஆவணி 13 (28—8—68) புதன் ★ வெளியூர்: ஆவணி 14 (29—8—68) வியாழன் [இதழ்: 63

அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கத் திட்டம்

தேங்காய் மாவு தயாரிக்க மற்றொரு நடவடிக்கை

கோவை, ஆக. 28—

அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுப்பதற்கான முன்னோட்டத் திட்டமொன்று தஞ்சை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

தேங்காயிலிருந்து எண்ணெய் எடுக்கப்பட்டபிறகு அதன் கழிவுப் பொருளைக்கொண்டு தேங்காய் மாவு தயாரிப்பதற்கான மற்றொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

மொழி ஆதிக்கக்காரர்களின் மனம் இன்னும் மாறவில்லை

உரிமையைப்பாதுகாக்கும் அறப்போர் தொடர்ந்துநடக்கும்நிலையேஉள்ளது

வடக்கேயுள்ளவர்களின் 'இராசதந்திரம்' இந்நிலைமையைத் தவிர்த்திட இயலுமா?

முதலமைச்சர் அறிஞர் அண்ணா தெளிவுரை

சென்னை, ஆக. 28—

"இன்று தமிழ் மொழிக்கும் தமிழருக்கும் தமிழ் நாட்டிற்கும் ஏற்றம் கிடைத்திருக்கிறது; எனினும், தமிழர் உரிமைகளைப் பாதுகாக்கும் அறப்போர் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்ற நிலை இருக்கத்தான் செய்கிறது. அந்த அளவுக்கு மொழி ஆதிக்கக்காரர்களின் மனம் இன்னும் மாறாமல்தான் இருக்கிறது!

"ஒருமைப்பாடு என்பது ஓட்டிக்கொண்டிருப்பது அல்ல; ஐந்து விரல்களும் எப்படித் தனித்தனியாக இயங்கவும் --- அதேநேரத்தில் ஒன்று சேர்ந்தும் இருக்கின்றனவோ --- அதுபோல், மாநிலங்கள் இயங்கிடும் வகையில் அரசியல் அமைப்புத் திருத்தப்பட வேண்டும்; இதற்காக நாம் கடுமையாகப் போராட வேண்டுமா என்பது, வடக்கே இருக்கும் இராசதந்திரத்தைப் பொறுத்தது! இதை இராசதந்திரமாக ('டிப்ளமசி'யாக)க் கருதாமல், பெருந்தலைமைப்('ஸ்டேட்ஸ்மென்ஷிப்') போக்காகக் கருதி, அவர்கள் செயல்பட வேண்டும். அந்த இராசதந்திரப் போக்கு அங்கு இருக்கிறது என நான் உறுதியாக நம்புகிறேன் --- சில வேளைகளில் அந்த நம்பிக்கைக்கு மாறுகச் சில நடவடிக்கைகள் நடந்தால் கூட.

"ஆகவே, தென் மாநிலங்களில் மாநில உரிமை கோரும் இலட்சியத்தை மக்கள் புரிந்துகொள்ளச் செய்யும் பணியில் இனி ஈடுபட வேண்டும். அதற்காகக் கருநாடகம், ஆந்திரம், கேரளம் ஆகிய இடங்களில் பத்திரிகைகள் துவங்கப்பட வேண்டும் எனக் கூறுகின்றனர்; அதற்கான காலம் கனிகின்ற வரையில் --- 'சூழ்நிலை சரியாக இருக்கிறது' என்று தானே உணருகின்ற வரையில் பொறுத்திருக்க வேண்டும். நான் எதையும் தாமதமாச் செய்து பழக்கப்பட்டவனே தவிர, தவறுகச் செய்து விட்டுப் பிறகு வருத்தப்படுபவன் அல்லன்; அந்த மாநிலங்களிலும் மாநில உரிமை கோரும் எண்ணம் வளர்ந்து வருகிறது; உரிய காலம் வரும்போது என்னுடைய யோசனைகளைத் தருவதற்குத் தயாராக இருக்கிறேன்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், 'தினத் தந்தி' பத்திரிகையின் வெள்ளி விழாக் கூட்டத்தில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டி விளக்கினார்கள்.

'தினத்தந்தி' நாளிதழ் தொடங்கி 25 ஆண்டுகள் நிறைவெய்திடதையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வெள்ளி விழா, நேற்று மாலை தினத்தந்தி அலுவலகத்தில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமை வகித்து வெள்ளி விழா மலரை வெளியிட்டார்கள்.

மற்றும் அமைச்சர்களும், தமிழறிஞர்களும் கலந்துகொண்டு 'தினத்தந்தி'க்குப் பாராட்டுத் தெரிவித்துக் கொண்டனர்.

நிகழ்ச்சியின் துவக்கத்தில் மதுரை பொன்னுசாமி — சேது ராமன் குழுவினர், நாதசுர இன்னிசை வழங்கினர்.

'தினத் தந்தி' இயக்குநர் சிவந்தி ஆதித்தனார் வரவேற்புரையாற்றினார்.

'தினத் தந்தியின் வெள்ளி விழாச் சின்னம், அறிஞர் அண்ணா அவர்களால் ஆதித்தனாருக்கு வழங்கப்பட்டது.

முதலமைச்சர் அண்ணா

முதலமைச்சர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரையாவது:—

ஓர் அமைப்பை உண்டாக்குவது கடினம்; அப்படி ஓர் அமைப்பை உண்டாக்கிவிட்ட பிறகு அதற்குப் பின்னால் அதை நடத்துபவர்கள் அக்கறையற்று இருந்துவிட்டால் வெகு விரைவில் அந்த அமைப்பு கலைந்து விடும்; ஆனால் ஆதித்தனார் அவர்கள், நல்லதோர் அமைப்பை ஏற்படுத்தியதோடு, அதைத் திறம்பட நடத்தும் பிள்ளைகளையும் பெற்றுப் பயிற்சி தந்திருக்கிறார்.

சிமையில் பார்-அட்-லா படித்தவர் ஆதித்தனார்; மலேசியாவில் பாரிஸ்டராக இருந்து வளமான வருவாய் பெற்றுக்கொண்டிருந்தவர்; அப்பேர்ப்பட்டவருக்கு 'பத்திரிகை நடத்த வேண்டும்' என்ற ஆவல் ஏற்பட்டது. தமிழ் மொழியின் பேரிலும், தமிழ்நாட்டின் பேரிலும் கொண்ட பற்றுதான் அவரை இப்படி இயக்கியது.

ஒரு தொழிலில் ஆர்வமும் நம்பிக்கையும், 'நல்லது செய்கிறேம்' என்ற உறுதியும் இருந்தால் போதும் -- தடைகளை மீறி வெற்றிகளைப் பெறுவோம்! அதனை மெய்ப்பித்துக் காட்டியவர் ஆதித்தனார்!

'தினத் தந்தி', பத்திரிகையாக மட்டும் இல்லாமல், தமிழுக்கு -- தமிழருக்கு ஆபத்து வரும்போது தமிழ் உணர்வூட்டி அது வாளாகவும், கேடயமாகவும், தமிழரின் உரிமை காக்கும் போர் வீரனாகவும் பணியாற்றியுள்ளது!

இயலிபு காரணமாக ஏற்பட்ட நிலை!

ஆதித்தனார் அவர்கள் பாரிஸ்டர் தொழிலை நடத்தியிருந்தால் நீதி பதியாகமாறி இங்கேரம் ஓய்வு பெற்றிருப்பார்!

அவரது இயல்பு அது அல்ல; போராடாமல் ஒதுங்கியிருந்து வாழ்வு நடத்துவது அவருக்குப் பிடிக்காது; எப்போதும் சுறுசுறுப்புடன் இயங்குவதுதான் அவரது இயல்பு; அந்த இயல்பு காரணமாகத்தான் அவர், சட்டமன்ற அவைத் தலைவர் பதவியைக்கூட விட்டுவிட்டு வந்தாரே தவிர யார் யாரோ --- என்னென்னவோ கற்பனை செய்து கொண்டு பேசுகிறார்களே --- அதுவல்ல உண்மையான காரணம்!

அவைத் தலைவர் பதவியை ஏற்கும்போதுகூட அவர் என்னிடம், 'பல்மனி நேரம் ஒரே இடத்தில் உட்கார்ந்திருக்க வேண்டுமே--- என் இயல்புக்கு அது ஒத்து வராதே' என்று அவர் கூறியதுண்டு; 'எத்தனையோ விஷயங்களில் பழகியபோன நீங்கள் இதிலும் பழகிக்கொள்ளுங்கள்' என்று கூறினேன்.

ஆனால் அவர் அரசியலில் முழுநேரமும் கொண்டிடும் இயல்புடனேயே இருந்ததாம், அந்தப் பதவியை விட்டுவர நேர்ந்தது!

ஐந்தாண்டுத் திட்டமாக ஏற்றுக்கொள்ளட்டும்!

தமிழ் நாட்டிற்கு உரிய நிலை--- உரிய வளர்ச்சி கிட்டி---நாட்டு நிலையை மக்களுக்கு உணர்த்திடும் பணியை அடுத்த ஐந்தாண்டுத் திட்டமாக 'தினத் தந்தி' ஏடு எடுத்துக்கொள்ள வேண்டும்; இது ஒருபைப்பாட்டுக்கு விரோதமானதல்ல!"

விழாவில், அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன், ஏ. கோவிந்தசாமி, செ. மாதவன், மா. முத்துசாமி, எஸ். தே. சாதிக் பாட்சா, திரு.ம தி சத்தியவாணிமுத்து, கி. ஆ பெ. விசுவநாதம், டாக்டர்

(4-ம் பக்கம் பார்க்க)

இலாபகரமாக சிறப்பு அங்காடிகள்

அமைச்சர் மாதவன் விளக்கம்

சென்னை, ஆக. 26—

"சிறப்பு அங்காடிகள் பல இலாபகரமாகவே நடந்துவருகின்றன; நட்டத்தில் நடைபெற்றுவரும் சிறப்பு அங்காடிகளில் ஏன் நட்டம் ஏற்படுகிறது என்பதையும் ஆராய்ந்து அதையும் தவிர்க்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம்; எனவே, சிறப்பு அங்காடிகள் நல்ல இலாபகரமாக நடைபெறும் என்ற நம்பிக்கையும் இருக்கிறது"

என்று கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. செ. மாதவன், சட்டமன்றக் கேள்வி நேரத்தில் தெரிவித்தார்.

மத்திய அரசு முன்வருமானால்...

தமிழக அரசுக்குச் சங்கடமில்லை

சென்னை, ஆக. 26—

"டில்லியில் குவிந்து கிடக்கும் அதிகாரங்கள் மாநிலங்களுக்குப் பரவலாக்கப்பட வேண்டும் என்று கோருகின்ற தி. மு. க. அரசு இங்கு தன் கைவசம் குவித்துவைத்துள்ள அதிகாரங்களை, நகராட்சிகளுக்குப் பரவலாக்க முன் வருமா?"

என்று சட்டமன்றத்தில் கரிய மாணிக்கம் அம்பலம் (சுதந்தரா) கேட்டார்.

"மக்களின் நன்மையைக் கருதி மத்திய அரசு, தனது அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க முன்வருமானால், தனது அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதில் இந்த அரசுக்கு எந்தவிதமான சங்கடமும் இருக்காது"

என உள்ளாட்சித் துறை அமைச்சர் மா. முத்துசாமி பதிலளித்தார்.

'நம் நாடு' சிறப்பு மலர்

பேரறிஞர் அண்ணா அவர்களின் 60-ம் ஆண்டு பிறந்த நாளையொட்டி, 14--9--68 அன்று 'நம் நாடு' இதழ் சிறப்பு மலராக வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

கட்சி மனப்பான்மைதான் வெளிப்பட்டிருக்கிறது--

மக்களின் மனப்பான்மை பிரதிபலிக்கவில்லை!

உள்ளே ஒரு பேச்சு-- வெளியில் வேறொரு பேச்சா?

கரைந்துவரும் காங்கிரசா நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவது?

'தெளிவு பெற்ற மக்கள் நம்பிக்கை தெரிவித்துவிட்டனர்'-- சட்டமன்றத்தில் ம. பொ. சிவஞானம் முழக்கம்

சட்டமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்தில் தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் கலந்துகொண்டு பேசுகையில், காங்கிரசுக்காரர்களின் குற்றச்சாட்டுகளைத் தமது ஆணித்தரமான வாதத்தால் சுக்குநூறுக்கினார்.

'அண்ணாவின் ஆட்சி ஏற்பட்டது தமிழ் மக்களுக்குக் கிடைத்தற்கரிய பேறு' என்பதையும், இந்த ஆட்சிக்கு நாளுக்குநாள் மக்களின் ஆதரவு பெருகிவருவதையும் எடுத்துத்தகாட்டி, இந்த ஆட்சிக்கு அவைதோறும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அவர் பேசியதாவது :—

கெட்டுப்போன பொருளை நீக்கா விட்டால் சுகாதாரத்துக்குக் கேடு என்பதை உணராது, காங்கிரசிலிருந்து வெளியேறிய வன் நான.

எந்த ஓர் ஆட்சிக்கு எதிராக நீங்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தீர்களோ--- அதே ஆட்சியில் நீங்கள் இருந்த போது செய்தவைகளை எல்லாம் எண்ணிப் பார்த்த பிறகு இந்தத் தீர்மானத்தைத் எதிர்க்கிறேன்.

இந்தத் தீர்மானத்தில் நீங்கள் கொடுத்திருக்கின்ற 11 அம்சக் குற்றச்சாட்டுப் பட்டியலை படித்துப் பார்த்த பிறகும் இதை எதிர்க்கிறேன்.

காங்கிரசுக் கட்சியின் சார்பில் கொண்டுவரப்பட்ட இத்தீர்மானத்தில், கட்சியின் மனப்பான்மை வெளிப்பட்டிருக்கிறதே தவிர, நாட்டு மக்களின் மனப்பான்மை பிரதிபலிக்கவில்லை; அதனால்தான் நான் இதை எதிர்க்கிறேன்.

உங்கள் தலைவர் கூறுவதுபோல், பொதுத் தேர்தலின்போது, ஒரு வேளை மக்கள் சோபாவேசத்திலே உங்களைத் தோற்கடித்திருக்கலாம்; சந்தர்ப்பவசமாகவே இதை ஏற்றுக்கொள்ளலாம்.

ஆனால், அதற்குப் பிறகு தென்செனையில் நாடாளுமன்ற இடைத் தேர்தல் நடைபெற்றது. ஆறு சட்டமன்றத் தொகுதிகள் அடங்கிய—எதையும் சிந்தித்துப் பார்த்து உணர்ந்து கொள்கிற தெளிந்த அறிவு படைத்த மக்கள் அடங்கிய—அந்தத் தொகுதியில் தேர்தல் நடைபெற்றது.

ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் பொதுத் தேர்தலில் கிடைத்த வாக்குகளின்படி அதிகமான வாக்குகளை அளித்து மக்கள், தி. மு. கழக வேட்பாளரை வெற்றி பெறச் செய்தனர்.

அதற்குப் பிறகு சங்ககிரி சட்டமன்ற இடைத் தேர்தலிலும், தென்காசி இடைத் தேர்தலிலும் மக்கள் பெரும்தத்துக்குரிய வெற்றியினை, தி. மு. கழகத்திற்கு அளித்தார்கள்.

இவ்வாறு அளித்த மக்கள் தீர்ப்புக்குப் பிறகும் மேல் சபையிலும் முக்கிய எதிர்க் கட்சியாக இருந்த காங்கிரசு, இடைத் தேர்தலில் பல இடங்களை இழந்தது; சட்டதாரிகள், ஆசிரியர்கள் வெற்றி பெற்றனர்.

இப்படிப் பொதுத்தேர்தலுக்குப் பிறகு காங்கிரசு கரைந்து கொண்டே வருகிறது. இவ்வாறிருக்க, மக்கள் நம்பிக்கை பெற்ற ஒரு ஆட்சிமீது மக்கள் நம்பிக்கையை இழந்து கொண்டே வரும் ஒரு கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவது தார்மத்தோடு பொருந்தி வராது!

நீங்கள் கொடுத்திருக்கின்ற பட்டியலைப் பார்க்கிறேன்; அந்தப் பட்டியலில் உள்ளவைகளெல்லாம் என்னென்ன இருந்திருக்கவேண்டும் என்பதைப் பற்றி நான் சிந்திக்கிறேன்.

'படி அரிசித் திட்டம் எங்கே?' என்று வெளியே சலசலப்பு கட்டிக்கொண்டு கேட்டு வந்தீர்களே--- அது பற்றி இந்தத் தீர்மானத்தில் ஏன் குறிப்பிடவில்லை என்று கேட்கிறேன்.

அதுபோல, 'பெண்கள் தெருவில் நடமாட முடியவில்லை' என்று முன்னாள் மத்திய அமைச்சர் ஒருவர் பேசினார்; அதை இங்கான் காங்கிரசுத் தலைவரிடம் கூறி, அவரை நம்ப வைத்தார்; அவரும் அதை உண்மையென்று நம்பி 'அது அப்படியானால் நீங்கள் எல்லாம் பாஞ்சாலிகளாக மாறுங்கள்' என்று உபதேசம் செய்தார்.

கண்ணகி பிறந்த நாடு இது என்பது தெரியாமல், அப்படி தமிழ் நாட்டுப் பெண்களைப் பாஞ்சாலிகளாக மாறும்படிக் கூறக்கூடிய வகையில் காங்கிரசத் தலைவரைப் பேச --- நம்பவைத்த நீங்கள், ஏன் அந்த விஷயத்தை இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானப் பட்டியலில் சேர்க்கவில்லை?

இதே மன்றத்தில் இரு மொழித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை உங்கள் கட்சித் தலைவர், 'இது ஒரு அரசியல் மோசடி' என்று குறிப்பிட்டார்; 'அத்தகைய மோசடித் திட்டத்தை எதிர்க்கிறோம்' என்று இந்தப் பட்டியலில் சேர்த்திருக்க வேண்டுமல்லவா? ஏன் சேர்க்கவில்லை?

'வெளியே ஒரு பேச்சு; உள்ளே ஒரு பேச்சா' என்று கேட்கிறேன்.

எது—எப்படியிருந்த போதிலும், 'இந்திதான் அகில இந்தியாவின் ஆட்சிமொழி' என்பது அகில இந்தியக் காங்கிரசுக் கட்சியின் கொள்கை.

திராவிட முன்னேற்றக் கழகம், 'இந்தி எந்தவகையிலும் கூடாது; என். சி. சி. படையில இந்தியில் சில சொற்கள்கூட இருக்கக் கூடாது' என்று திட்டவட்டமாகக் கூறி, அதைத் தீர்மானவடிவில் இந்த மன்றத்தில் நிறைவேற்றியது.

உங்கள் கொள்கையில் உறுதி இருந்தால் அதைச் சேர்த்திருக்கலாம் — சேர்க்கவில்லையே — ஏன்?

இவை ஒருபுறமிருக்க 'தி. மு. கழகத்தில் உட்பூசல்--- பிளவு இருக்கிறது; இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு வாக்கெடுப்பின்போது பிளவை அதிகப்படுத்திக்காட்டலாம்' என்ற இராசதந்திரமாக இதைக் கொண்டுவந்திருக்கலாமா என்றால், அதுவும் இல்லை; அப்படிப்பட்ட பூசல இல்லை!

தி மு. கழகத்திற்கும்—தோழமைக் கட்சிகளுக்கும் இடையே உட்பூசலே ஏற்படுத்திப் பிளவுபடுத்தும் இராசதந்திரப் போக்கா எனறால், அதுவும் இல்லை!

சந்தேகம் இல்லாமல் அனைவரும் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்க்கினறார்கள்.

ஆக, உங்களைத் தவிர மற்ற கட்சிகள் அனைத்துக்கும் தி. மு. கழக அரசின்மீது நம்பிக்கை இருக்கிறது என்பது தெளிவாக்கப் பட்டுவிட்டது!

இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற ஆட்சியே கூட்டணி ஆட்சிதான். 'அமைச்சரவையிலே பங்கேற்றுவதான் கூடாது' என றில்லை; அதில் இல்லாமலே நாங்களாக அனைவரும் ஒன்றாக இருக்கிறோம்.

அப்படியிருக்க, நீங்கள் கொண்டு வந்திருக்கும் தீர்மானம் வெற்றி பெறப்போவதில்லை.

அதில் நீங்கள் சொல்லியிருப்பதென ?—வேலை நிறுத்தம் எங்கும் ஏற்பட்டிருப்பதாகக் கூறியிருக்கிறீர்கள்; ஆனால், இவை ஏன் ஏற்பட்டது? நீங்கள் இங்கே எதிர்க்கட்சியாக இருந்த போதிலும், அகில இந்தியாவில் ஆளுங்கட்சியாக இருக்கிறீர்கள் என்பதை மறந்து விட்டே பேசுகிறீர்கள்!

பெரும் பெரும் தொழில்களை நடத்துவோர் எல்லாம் உங்கள் பக்கம்! நிலப் பிரபுக்கள் உங்கள் பக்கம்!

உங்கள் கட்சிக்கு 80 ஆண்டுக்கால வரலாறு இருக்கிறது என்று நீங்ளாக பெருமைப்படுகிறீர்கள்; நியாயம் இருக்கிறது; அதற்காக உழைத்தவர்கள் பலர் இல்லையென்றாலும், அந்த இடத்தில் இருக்கின்றகாரணத்தால் அந்தப் பெருமையில் உங்களுக்கும் பங்குண்டு.

காந்தியார் ஒருமுறை, வெண்டல் வில்லி என்பவரிடம் கூறியதை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

வெண்டல் வில்லி காந்தியாரிடம்,

"சுதந்தரம் கிடைத்ததும் லிவசாலிகளுக்கு நீங்கள் செய்யப்போகதென்ன?"

என்று கேட்டார்; அதற்குக் காந்தியார்,

"உழுபவர்களுக்கே நிலம் என்றுக்குவோம்' என்றார்.

'நஷ்டாடு தருவீர்களா ?' என்று கேட்டார்; 'எப்படிக் கொடுப்பது; அவர்களே, 'நஷ்டாடு வேண்டாம்' என்று கூறிவிட்டு நிலத்தை ஒப்படைப்பார்கள்' என்றார்.

அதை, நாட்டு மக்கள் மிகவும் நம்பினார்கள்! 20 ஆண்டுக்காலம் நம்பியிருந்து பிறகு ஏமாற்றம் அடைந்தார்கள்.

அதன் பிறகு, தி. மு. கழகத்தை ஆட்சிக்கு அழைத்தார்கள்!

ஆக, நீங்கள் விதைத்த விதையை அவர்கள் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள்!

காங்கியார் மறைந்த பிறகு தொழிலாளர்களும், உழவர்களும், 'இந்த நாட்டில் புதிய தொரு சமுதாயம் உருவாக்கப் படப்போகிறது' என்று நம்பியிருந்து ஏமாற்றப்பட்டார்கள்! 'அந்த ஏமாற்றத்தின் விளைவுதான் இது' என்று நீங்கள் கருதக்கூடாது!

கடந்த இருபதாண்டுக் காலத்தில் 'படித்தவர்கள் ஒரு சாதி—படிக்காத தொழிலாளர்கள் ஒரு சாதி' என்று இரு வேறு சாதி மனப்பான்மை உண்டாக்கப்பட்டிருக்கது; அவற்றில், காலக் கட்டத்தில் நீண்ட இடைவெளி இருந்தது; அந்த இடைவெளித் திடலில் ஏற்பட்டதுதான் மாணவர்—பல் தொழிலாளர் தகராறு!

இருபதாண்டுக்கால ஆட்சியில் ஏற்பட்ட அழுகல் பகுதியிலிருந்து விசும் முடை நாற்றம் இது!

தி. மு. கழக ஆட்சிக்கு நிபந்தனையற்ற ஆதரவு தாருங்கள்—நீங்கள் கூறிய சமுதாய மாற்றத்தைச் செய்திட!

தியாகிகளுக்கு உதவிப் பணம் பற்றிப் பேசப்பட்டது. 20 ஆண்டுக்காலமாக உங்களால் வீரல் விட்டு எண்ணக்கூடிய சிலருக்கு மட்டுமே கொடுக்க முடிந்தது; ஆனால் ஒன்றரை ஆண்டுக்கால ஆட்சியில் நீங்கள் கொடுக்கமுடியாத உதவித் தொகையை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்!

ஏழு—எட்டு ஆண்டுக் காலத்திற்கு முன்பு இராஜாஜி முதலமைச்சராக இருந்தபோது, 'தியாகிகளுச்குக் கொடுத்த நிலத்தை எல்லாம் திரும்பித் தந்துவிட வேண்டும்; அதில் நம்பிக்கை இல்லை' என்று அறிவித்தார்; உடனே நான், எனக்கு அளிக்கப்பட்ட நிலத்தை திருப்பிக் கொடுத்துவிட்டேன். அப்படி எத்தனைப் பேர் திருப்பிக் கொடுத்தார்கள் என்பது எனக்குத் தெரியாது.

அப்படி உங்களால் கொடுக்க முடியாது என்று மறுத்துவிட்ட ஒன்றை வேறுபட்ட முகாமில் உள்ளவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு அவர்களிடமிருந்து கேட்பது நியாயமா? அப்படி நீங்கள் வாங்கிக் கொடுத்தால் அந்த தியாகிகள்தான் வருத்தப்படமாட்டார்களா ?

தீ விபத்துப் பற்றிக் கூறப்பட்டது; குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க அவுசாரம் தேவை' என்பதை நான் உணருகிறேன்; ஆனால் கடிய விரவில் கண்டுபிடிக்கவேண்டியது அவசியம்.

நாட்டில் தீ விபத்து மட்டுமல்ல-- ஆண்டுதோறும் வெள்ளம் புகுந்தும் குடிசைகள் தேதமடைகின்றன. பள்ளத்தில் குடிசைகள் போடப்படுவதால் இங்கில ஏற்படுகிறது. 'அவர்களுக்கு நல்ல இடத்தில் குடிசைகள் போட்டுத்தர வேண்டும்' என்று அப்போது நான கூறினேன்; அதற்கு அப்போதைய முதலமைச்சர், 'சொல்வது எளிது-- செய்வது கடினம்' என்று கூறினாரே ஒழிய, பிரச்சினையில் அக்கறை காட்டவில்லை!

ஆனால் இன்றைய முதலமைச்சர், 'தீ விபத்தால் குடிசைகள் பற்றி எரிகின்றன; அதனால் மக்கள் அல்லல்படுகிறார்கள்' என்பதை அறிந்ததும், தீப்பற்றாத வீடுகள் கட்டித் தர வேண்டுமென்று மாற்றுத் திட்டம் ஒன்றை வகுத்தார்-

"பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடு கட்டித் தர இடவசதி இல்லை; அவைவெல்லாம் தனியார் இடத்தில் சிக்கிக்கொண்டிருக்கின்றன" என்று முதலமைச்சர் கூறினார்; அப்போதாவது எதிர்க் கட்சித் தலைவர், 'தனியார் இடத்தை ஏன் அப்பற்றுக் கூடாது' 'கைப்பற்ற ஏன் தயக்கம்?' என்றவுடன் கேட்டிருக்க வேண்டும்; கேட்டார் களா-கேட் கவாட்டார்களா; ஏனென்றால், அந்த தனியார் எல்லாம் அவர்கள் பக்கம் இருப்பவர்கள்!

தனியாரிடமுள்ள இடங்களை அரசு எந்த வகையிலும் கைப்பற்ற வேண்டுமென்று ஏன் வலியுறுத்தக்கூடாது?

சட்டமும் ஒழுங்கும் கெட்டுவிட்டதாகக் கூறுகிறார்கள்; இதை, எந்த அரசு மீதும் கூறலாம்; கேரளம், ஒரிசா போன்ற காங்கிரசு அல்லாத ஆட்சிகளின் மீதும் இத்தகைய குற்றச்சாட்டு கூறப்படுகிறது. காங்கிரசு ஆளுகின்ற மத்திய ஆட்சியிலும், மாநில ஆட்சிகளிலும் இந்தக் குறைபாடு இருக்கிறது; ஆகவே இந்தப் பட்டியல் நாடு முழுவதும் நீண்டிருக்கிறது.

நாம் விரும்புகிற போக்கில் சட்டதையும், ஒழுங்கையும் செயல்படுத்த முடியாததே இந்நிற்குக் காரணம்; இதற்கு வேறு காரணமும் இருக்கிறது.

மக்களின் தேவைகளை அறிந்து அவற்றை அன்றைய ஆட்சியாளரால் நிறைவு செய்ய முடியவில்லை; அதன் காரணமாக, மக்கள் விருப்பிய போக்கில் செயல்பட விழைகிறார்கள்!

நீங்கள் இதை ஒரு சுதந்தர அரசாக கருதிக்கொண்டு ஏதேதோ பேசுகிறீர்கள்; அதிகாரங்களை பெல்லாம் குவித்து வைத்துக் கொண்டிருக்கின்ற வேறு ஒரு சக்தி இருக்கிறது என்பதை மறந்துவிடுகிறீர்கள்!

'உங்கள்மீது பழி போட்டால் மத்திய அரசுமீது பழிபோடுகிறீர்களே' என்று கேட்கிறீர்கள்! மத்திய அரசு, மாநில அரசுகளை மாவட்ட போர்டுபோல் நடத்துகிறது!

மத்திய அரசிடம் குறிப்பிட்ட சில அதிகாரங்களை வைத்துக் கொண்டு மற்ற அதிகாரங்களை அந்தந்த மாநிலங்களிடமே ஒப்படைத்தால், ரூபாய்க்கு ஒரு படி மட்டுமல்ல—மூன்று படி கூடப் போடக்கூடிய சக்தியுடையதாகி விடும்!

இங்கே ஒரு கல்வி இலாகா--- மத்தியில் ஒரு கல்வி இலாகா! அதுபோல் சுகாதார இலாகா --- இங்கொன்று அங்கொன்று! வெவ்வேறு வெல்லாம் பணம் பாழாகவில்லையா?

இப்படி ஒவ்வொரு துறையிலும் பணம் வீணாக்கப்படுகிறது.

ஊதாரித்தனமாகச் செலவு செய்தாக இவர்கள் குற்றஞ்சாட்டினார்கள்! இவர்களின் ஊதாரித் தனம் உலகறிந்த ஒன்று!

இந்த அரசு, நமக்கு, வாராது போல் வந்த மாமனிமையைப் போன்றது!

தமிழ் நாடு தனி மாநிலமாக இயங்கத் துவங்கிய 1957-லிருந்து 1968 வரை தமிழுக்குத் தனி உரிமை இல்லை! பத்தாண்டு காலமாக இதை நான் எதிர்பார்த்துக் கேண்டிருந்தேன்; 'காங்கிரசு, ஆட்சியில் இது கிடைக்காது; தமிழ்நாட்டில் ஆட்சி மாறினாலுதான் தமிழுக்கு ஏற்றம் கிடைக்கும்' என்று கருதினேன்.

அதுபோல் தமிழ் நாட்டில் அண்ணா ஆட்சி ஏற்பட்டபிறகு தான், தமிழ் ஆட்சி மொழியாக எல்லாத் துறையிலும் ஏற்றம் பெற்றது!

ஆகவே, இந்த ஆட்சிமீது நம்பிக்கையில்லை என்று கொண்டு வரப்பட்ட தீர்மானதைத் எதிர்க்கிறேன்.

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அரிசியின் அளவு 1,000 கிராம் ஆக குறைக்கப்பட்டது.

"அரிசியின் அளவு குறைக்கப் பட்டபோதிலும், அதற்கு மாற்றாகக் கோதுமையும், சோளமும் வழங்கப்படுகின்றன.

"ஒவ்வொரு மாவட்டத்திலும் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு, அரிசி அதிகம் வழங்கப்பட்டிருக்கிறது; வழங்கப்பட்ட அரிசியின் அளவு கூடியிருக்கிறது.

"இராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டில் 1 இலட்சம் டன் அதிகமாக வழங்கப்பட்டிருக்கிறது. குடும்பக் கார்டுக்குத் தரப்பட வேண்டிய மொத்த அளவு குறைக்கப்படவில்லை; மாருக, அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

"சட்டபூர்வமான பங்கீட்டு முறை அமுலிலுள்ள சென்னைக்கும், கோவைக்கும் அரிசி வழங்கும் முழுப் பொறுப்பை மாநில அரசு ஏற்றிருக்கிறது. பங்கீட்டு அளவு குறைக்கப்படும் எனப் பரப்பப்படும் வதந்தியை இந்த அரசு அறியும்; இது வதந்தி தான்; பங்கீட்டு அளவில் ஒரு சிறு மாறுதலும் செய்யும் நோக்கமில்லை."

"உணவு நிலைமையைப் பொறுத்தமட்டில், இந்தநிலான்கு மாதங்கள் நெருக்கடியாக இருந்தபோதிலும், சிக்கனத்தை மக்கள் கையாண்டு அரசுடன் ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்."

விதிமுறைக்குட்பட்டே விற்பனை நடைபெற்றது

துரித நடவடிக்கையின் மூலம் இலாபமும் கிடைத்தது

வரம்புக்கு அப்பாற்பட்ட விவரங்களை எவ்வாறு தர இயலும்?

பருப்பு விற்பனை --- அமைச்சர் கே. ஏ. மதியழகன் தரும் விவரம்

சென்னை, ஆக. 28—

"தி. மு. கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நேரத்தில் தமிழக அரசின் உணவுத் துறையின் பொறுப்பில் தமிழகத்தின் பல் வேறுமாவட்டங்களில் கையிருப் பிலிருந்த துவரம் பருப்பு விரை வில் கெட்டுப் போகக்கூடிய நிலையில் இருந்தது; துரித நட வடிக்கை எடுத்து அவற்றின் விற்னைக்கு அதிகாரிகள் மேற் கொண்ட நடவடிக்கைகளாலும் ரூ. 3 இலட்சத்து 45 ஆயிரம் இலாபம் கிடைத்தது"

என்று உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன், சட்டமன்ற மேலவை யில் ஒரு கேள்விக்குப் பதிலளிக் கையில் தெரிவித்தார். அது பற் றிய விவரம் வருமாறு:—

கேள்வி:— "பருப்பு வகைகள் மாவட்டவாரியாக இருந்த இருப்பு எவ்வளவு? இவை யார் யாருக்கு எத்தேதி டன்கள் வீதம் என்ன விலைக்குக் கொடுக்கப் பட்டன? பெயர்—முகவரி—பருப்பைப் பெற்ற வர்த்தகர்கள் கட்டும் விற்பனை வரி—வருமான வரி முதலியனவும், இந்தமுறை பருப்பு வர்த்தகம் செய்துள்ளார் களா என்ற விவரமும் அச்சிட்டு அவையும் வைக்கப்படுமா?"

உணவமைச்சர் கே. ஏ. மதியழ கன்:—"அப்போது கையிருப் பில் இருந்த துவரம் பருப்பின் மொத்த விலை மதிப்பு ரூ. 1 கோடியே 11 இலட்சம். இது, கழக அரசினால் வாங்ப பட்டதல்ல; கழக அரசு பொறுப் பேற்ற சமயம் இந்தத் துவரம் பருப்பு, வெளி மார்க்கெட்டில் குவிண்டாலுக்கு ரூ 90-க்கு விற் றது; ஆனால் அரசு அதிக விலை கொடுத்து வாங்கியிருந்ததால், குவிண்டாலுக்கு ரூ. 105—110 என்ற அளவிலேயே விற்கப்பட வேண்டியதாக இருந்தது. அத னால், துவரம் பருப்பை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மேல் இருப்பில் வைக்கக்கூடாதென் றும், கையிருப்பில் உள்ள துவ ரம் பருப்பின் நிலையும் விரைவில் கெடக்கூடிய நிலையில் இருப்ப தாகவும் அதிகாரிகள் அரசுக் குத் தெரிவித்தனர். அதன் பேரில் கையிருப்பில் உள்ள துவரம் பருப்பைக் கூடிய விரை வில் தனியார் மூலம் விற்றுவிட ஏற்பாடு செய்யுமாறு அதிகாரி கள் கோரப்பட்டனர். அவ்வாறு செய்யப்படுவதில் இருபத்தொரு இலட்சம் ரூபாய்வரை அரசுக்கு நட்டமேற்படும் என்று அஞ்சப் பட்டது; ஆனால் முடிவில், இதில் ரூ. 3 இலட்சத்து 45 ஆயிரம் இலாபம் கிடைத்தது.

"இந்தப் பேரத்தை சிவில் சப்ளை கமிஷனர் அலுவலகத் தினர் நடத்தினர்; விதிமுறை களின்படியே நடத்தியுள்ளனர். மத்திய ஆடிட்டர்-ஜெனரல், அலுவலக அதிகாரிகள் ஆகி யோரது தணிக்கைகளுக்கெல் லாம் உட்பட்டே இந்தப் பேரம் முழுவதும் நடந்தேறியுள்ளது.

"கேள்வி எழுப்பிய உறுப்பின ருக்கும் நாட்டுக்கும் சொல்லக் கொள்வேன்—நானும் அந்தத் துவரம்பருப்பு வாங்கியவர்களின் பெயர்களைப் பார்த்தேன்; எங் கேனும் நமக்குத் தெரிந்த பெயர் ஏதேனும் ஒன்று வருகிறதா என்று பார்த்தேன்—வரவில்லை!

"இங்கிலீஷில், உறுப்பினர் கேட் டுள்ளது போன்ற மிக விரிவான தோர் பெயர்--முகவரி பட்டியலை இங்கு அளிக்க இயலாதெனத் தெரிவித்துக்கொள்கிறேன்."

கேள்வி:—"இதில் ஏதும் களங்க மில்லை என்றால், நான் கேட் டுள்ள விவரங்களை அச்சிட்டுக் கொடுங்கள்."

அமைச்சர் கே. ஏ. மதியழகன்:— "இவ்வாறு ஒவ்வொரு ஊரிலும் எத்தேதி யார்--அவர்களுடைய பெயர்--முகவரி விவரம்--எவ் வெவருக்கு எவ்வளவு கொடுக் கப்பட்டது--என்றெல்லாம் கேட் கப்படுவது, வரப்பு முறைக்கு அப்பாற்பட்டதென்று கருது கிறேன். இத்தனை விவரங்களை யும் திரட்டி ஆகின்ற உழைப் பும், பணச் செலவும், இது ஏரக் கூடிய பலனைக் காட்டிலும் பன் மடங்கு அதிகமானதாகும்' எனவே அத்தகைய விவரங் களைத் திரட்டிடத் தேவை யில்லை."

அவைத் தலைவர்:—"போதுமான அளவுக்கு அமைச்சர் விளக்கி விட்டார்."

சாலை ஊர்திகள் எண்ணிக்கை உயர்வு

அரசுக்குக் கிடைத்த வருமானம் ரூ. 6 கோடி

சென்னை, ஆக. 27—

போக்குவரத்து நெருக்கடியைத் தணிக்கும் ஏற்பாடாகத் தமிழக அரசு, வாகனங்களுக்குத் தாராள மாக லைசென்சு தந்ததன் விளைவாக 1967-ம் ஆண்டில் சாலைகளில் ஓடிக் கொண்டிருக்கும் வண்டி களின் எண்ணிக்கையில் மிகுந்த உயர்வு ஏற்பட்டிருக்கிறது.

ஏற்கனவே 6,824 பஸ்கள் ஓடிக் கொண்டிருந்தன; அந்த எண் ணிக்கை 7,319-ஆக உயர்ந் திருக்கிறது. ஏறக்குறைய 500 பஸ்கள் அதிகமாக ஓடிக்கொண் டிருக்கின்றன.

இதுபோல், லாரிகளும் 13,732-ஆக இருந்து 13,838-ஆகவும், 5,811-ஆக இருந்த டாக்சிகள் 6,120-ஆகவும், 18,829-ஆக இருந்த மோட்டார் சைக்கிள்கள் 22,624-ஆகவும், கார்கள் மற்றும் ஏனைய வண்டி கள் 37,451-லிருந்து 48,330-ஆகவும் உயர்ந்திருக்கின்றன.

மோட்டார் சைக்கிளின் எண் ணிக்கையில்தான் மிக அதி மான உயர்வு ஏற்பட்டிருக் கிறது—அதாவது, 3,795.

வண்டிகள் வரி, மற்றும் கட்டண மாகச் சென்ற ஆண்டில் அரசு ரூ. 2-கோடிக்குமேல் வசூல் செய்திருக்கிறது.

உணவுப் பங்கீட்டு அளவு குறைக்கப்படமாட்டாது

பரப்பப்படும் வதந்தியை நம்பவேண்டாம்

சட்டமன்றத்தில் அமைச்சர் மதியழகன் விளக்கம்

சென்னை, ஆக. 26—

"மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்காகத் தண்ணீர் திறந்து விடுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவும், நாற்று நடவுப் பணி தாமதித்துத் துவங்கிய தன் காரணமாகவும், வட ஆற் காடு மாவட்டத்தில் பருவநிலை சாதகமாக இல்லாததாலும் உணவு நிலைமையைச் சற்று முன் செச்சரிக்கையுடனிருந்து சமாளிக்க வேண்டியிருக்கிறது; அடுத்த இரண்டு அல்லது மூன்று மாதங்கள் சற்று நெருக் கடியான காலமென்று கூற வேண்டியிருக்கிறது; உணவுப் பொருளில் சிக்கனம் அவசிய மாகிறது.

"எனினும், உணவுப் பங்கீட்டு அளவு எந்த இடத்திலும் குறைக் கப்படவில்லை; உணவுத் தானி யம் வழங்குவது சீராகவே நடை பெற்று வருகிறது"

என்று உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள், சட்டமன்றத் தில் கொண்டுவரப்பட்ட தீர்மா னத்தைபொட்டி விடுத்த அறிக் யையில் குறிப்பிட்டுள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் கூடும்பக கார்டு அமுலில் உள்ள பகுதிகளில் தரப்பட்டுவந்த அரிசி யின் அளவு 1,200 கிராமிலிருந்து 1,000 கிராம் ஆகக் குறைக்கப்பட் டது குறித்து ஓர் வனவாசிப்பு தீர் மானத்தை ஏ.சுப்பராசா கொண்டு வந்தார்; இதற்குப் பதிலளிக்கை யில் அமைச்சர் மேலும் விளக்கிய தாவது:—

"தமிழ்நாட்டில் நபருக்கு வாரம் ஒன்றுக்குக் குறைந்தபட்சம் 1,400 கிராம் கிடைக்கச் செய்ய வேண்டுமென்பது உணவுப் பங் கீட்டின் திட்டமாகும். வெளிச் சந்தையில் தானியம் கிடைக் கும் நிலவரத்தைஒட்டியும், கையி ருப்புக்கு ஏற்பவும், கூட்டியோ குறைத்தோ அதிகாரிகள் வழங் கலாம்.

"இராமநாதபுரத்தைப் பொறுத்த வரையில், 10 நகரங்களிலும் --- 10 பேரூர்களிலும் --- சில கடற் கரையோரப்பகுதிகளிலும் குடும் பக் கார்டுத் திட்டம் அமுலில் இருக்கிறது. நகரப் பகுதிகளில் 1,200 கிராம அரிசியும், கடற் கரைப் பகுதிகளில் 300 கிராம் அரிசியும் தரப்பட்டுவந்தது.

"சூலை 28-ம் நாள் முதல் நகரப் பகுதிகளில் தரப்பட்டு வந்த

(2 ம் பக்கம் பார்க்க)

டிவிஎஸ் வினியோகிக்கும் உறுப்புகள் நம்பகமானவை

உழைப்பிற்கு ஆராய்ச்சி செய்யப்பெற்ற உறுப்புகளையே உபயோகித்து செலவைக் குறையுங்கள்

WL Commercial Wheels	Standard Battery	Springs and Leaves	FERODO Brake Linings and Clutch Facings
Lucas TVS Automobile Electrical Equipment	MICO Fuel Injection Parts	BANCO-ROYAL Gaskets and Radiators	Ap Lubrication Fittings
Hydraulic Brake System	KAP AUTO PARTS	Tappets Valves	BORG & BECK Clutch Spares
SD TVS Compressors and Servos	ROLON Timing Chains	allite Bulbs	DOUBLE Precision Parts
SIRUBBER Engine Mountings and Bushing Kits			FRITZ Filter Element
SUNDARAM Clutch Housings, Brake Drums and King pins	Tie Rod Ends	Fenner Fan Belts	ABC Roller Bearings
TVS Hydraulic Brake Parts	HELLA Horns	NBC Ball Bearings	TEX Wiper arms and Blades

டிவிஎஸ் விநியோகிக்கும் உறுப்புகளை உற்பத்தி செய்வோரில் பெரும்பாலோர் தங்கள் தங்கள் துறைகளில் தலைசிறந்தவர். அவை நீண்டநாள் உழைக்கும் என்பதில் ஐயமில்லை.
உங்கள் நம்பிக்கைக்குரியது டிவிஎஸ்

டி. விசுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட்
மதுரை-திருச்சி-திருநெல்வேலி-புதுக்கோட்டை
சேலம்-கோயமுத்தூர்-திருவனந்தபுரம்
சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட், மதராஸ்-பெங்களூர்-செகந்திராபாத்-விசாகப்பட்டினம்
மதராஸ் ஆட்டோ சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்
மதராஸ்-பெங்களூர்-விஜயவாடா

TVS/4653

நாடாளுமன்றத்தில் ச.சோ. உறுப்பினரின் இந்தி வெறி!

'இந்தியிலேயே அமைச்சர் பதில் தரவேண்டும்' என சண்டித்தனம்

'இந்தியில் விளக்கமுடியாதவர்கள் ஆங்கிலத்தில் பதிலளிக்கலாம்' என அவைத் தலைவர் தீர்ப்பு

புதுடில்லி, ஆக. 27—

நாடாளுமன்ற மேலவையில், ச. சோ. கட்சி உறுப்பினர் இராஜ் நாராயணன் என்பவர், தாம் இந்தியில் கேட்ட ஒரு கேள்விக்கு இந்தியிலேயே பதிலளிக்க வேண்டுமென வற்புறுத்தியபோது, மொரார்ஜி தேசாய் உள்ளிட்ட பல காங்கிரசுக்காரர்கள் கூடக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்; ஆங்கிலப் பேச்சுக்கு இந்தி மொழி பெயர்ப்பைக் கேட்கும் வசதி அவையில் இருப்பதைச் சுட்டிக்காட்டியபோதும்கூட அவர், இந்தியில் கேட்கப்பட்ட தமது கேள்விக்கு இந்தியில்தான் பதிலளிக்க வேண்டுமெனத் துணை அமைச்சரை வற்புறுத்தியபோது, அவைத் தலைவர், இன்னமிது தமது தீர்ப்பை வழங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதுபற்றிய விவரம் வருமாறு:—

இராஜ் நாராயணன் இந்தியில் கேட்ட ஒரு கேள்விக்கு சுகாதாரத் துறைத் துணையமைச்சர் பி. எஸ். மூர்த்தி ஆங்கிலத்தில் பதிலளிக்கத் துவங்கினார்; (திரு. மூர்த்தி ஆந்திராக்காரர் என்பது தெரிந்ததே).

உடனே, இராஜ் நாராயணன் எழுந்து அதை எதிர்த்தார்; உடனே மொரார்ஜி தேசாயே தலையிட்டு, 'இந்தியில் கேட்கப்படும் கேள்விகளுக்கு இந்தியிலேயே பதிலளிக்கப்பட வேண்டுமென்ற மரபு இருப்பதை ஒப்புக் கொள்கிறோம்; ஆனால், இராஜ் நாராயணன்போல் சில அமைச்சர்களால் இந்தியில் சரளமாகப் பேச முடியாது; துணை அமைச்சர் இந்தியில் திருப்திராமாகப் பேச முடியாதெனில், அவர் ஆங்கிலத்தைப் பயன்படுத்துவதை உறுப்பினர் எதிர்க்கக் கூடாது' என்றார்.

இராஜ் நாராயணனோ, 'தொடர்புடைய பிற அமைச்சர்கள் இந்தியில் பேசலாமே; அவர்கள் ஏன் நுக்கு கேள்விக்குப் பதிலளிக்கக் கூடாது?' என்றார்.

பி. கே. பி. சின்கா என்ற காங்கிரசு உறுப்பினர் எழுந்து, 'இந்திப் பகுதி உறுப்பினர்கள் இராஜ்நாராயணனின் பேச்சையே எதிர்க்கிறார்கள்' என்றார்.

அனுப் சிங் என்ற காங்கிரசு உறுப்பினர், 'இங்குக் கோரிக்கை நியாயமற்றது' என்றார்.

அவைத் தலைவரும் குடியரசுத் துணைத் தலைவருமான வி. வி. கிரி தமது தீர்ப்பைத் தெரிவித்தார்: அவர் கூறியதாவது:—

"ஓர் அமைச்சர் சரளமாக இந்தியில் விளக்க முடியாதெனறால் அவர் நிச்சயமாக ஆங்கிலத்தில் பேசலாம்.

"ராஜ் நாராயணனோ மற்றவர்களோ இந்தியில் பேசும்போது, அதன் மொழி பெயர்ப்பைக் கேட்க நான்—மிகுந்த வசதிக் குறைவுடன்—மொழி பெயர்ப்புக் கருவியை என் காதில் வைத்துக்கொள்கிறேனே!"

மு. கருணாநிதி

அவர்கட்கு

முரசு வழங்கு விழா

சென்னை 66-வது வட்டம் அயனாபுரம் கலைஞர் மன்றச் சார்பில் 30—8—68 மாலை 7 மணிக்கு இரா. அரிகரன் தலைமையில் அமைச்சர் மு. கருணாநிதி அவர்கட்கு மு. பொ. சிவஞானம் எம். எல்.சி. அவர்கள் முரசு வழங்குவார்; வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., வேலூர் நாராயணன் எம்.சி., நீலநாராயணன், ஆ. சண்முகம், கோ. மதிமாறன் ஆகியோர் வாழத்துரை வழங்குவர்; இரவு 10 மணிக்கு இரா. எத்திராசன் தலைமையில் சா. தளராசு குழு வினரின் இன்னிசை நடைபெறும்.

இரவல்: முன்னேற்றக் கழகத்தினரை, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்கள் ஆசிரியராகவும், வெளியீட்டு பகுதியை, அம்பேவுரசாமி கவுண்டர் ஆகியோர் அச்சகத்தில் (34, ஞானராஜா செட்டித் தெரு, சென்னை-12) அச்சிட்டு வெளியிடப்பட்டது.

நாகர்கோவில்

பெருநகர் கழகத் தேர்தல்

4-9-68 காலை 10-மணிக்கு

ஏற்கனவே விடுத்திருந்த அறிவிப்பினைத் தொடர்ந்து நாகர்கோவில் பெருநகரக் கழகத் தேர்தல் 4-9-68 புதன் காலை 10-மணிக்கு வடசேரி பயணிகள் விடுதியில் நடைபெறும்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நாளுக்குப் பிறகு அனுப்பி வைத்துள்ள எந்த ஒரு விண்ணப்பத் தாள்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

மகளிர் விழா

நெய்வேலி முத்தமிழ் மன்றச் சார்பில் மகளிர் விழா: 30—8—68 மாலை 6-30 மணிக்கு கலியுகங்கிலில்; தலைவர்: செல்வமணி தியாகராசன்; சி. தமிழரசி, அமுதா ராகவன், இராசேசுவரி தாசன் ஆகியோர், பல தலைப்புகளில் பேசுவர்.

மொழி ஆதிக்கக்காரர்களின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மு. வரதராசனார், திரு. ம. பொ. சிவஞானம் எம். எல். ஏ., திருகிருஷ்ணன (எழியிலண்ட விளம்பர நிறுவனம்) ஆகியோர் பேசினர். அவர்கள் பேசியதன் சுருக்கம் வருமாறு:—

க. ஆ. பெ. விசுவநாதம்

"இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு, முதன்முதல் 'தாந்தி' பத்திரிகையைக் காசு கொடுத்து வாங்கியவன் நான்தான்; தமிழ் மொழிக்கும், தமிழ் நாட்டிற்கும் தோன்றாத் துணையாக நின்று 'தினத் தந்தி' பணியாற்றி வந்திருக்கிறது."

இரா. நெடுஞ்செழியன்

"பல பத்திரிகைகள் இருந்தாலும், 'தினத் தாந்தி'யைத் தேடிப் பிடித்துப் படிக்கும் அளவிற்கு அதில் ஒரு சுவையும் இருக்கும். விடாமுயற்சியும் ஆர்வமுமே இந்த வெற்றிக்குக் காரணம்.

வெள்ளி விழா நடத்தும் 'தினத் தந்தி' பொன் விழாவையும்—நூற்றாண்டு விழாவையும் நடத்திட வேண்டும் என வாழ்த்துகிறேன்."

மு. கருணாநிதி

"ஆதித்தனார் சட்டமன்றத் தலைவராக இருந்தபோது சட்டமன்றத்தில் குறள் மணத்தைப் பரப்பினார்; தமிழ் மணம் பரவச் செய்தார்; சட்டமன்ற விதிகளையே தமிழில் ஆக்கினார்.

'தினத் தந்தி' தொடங்கியதற்கு முன்பு, 'தமிழன்' என்ற ஏட்டைத் துவக்கி, தமிழ் மொழியின் -- தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்தவர் ஆதித்தனார். அதே இலட்சியத்துடன் இன்றும் இயங்கி வருகிறார்; அவருடைய முயற்சியில் உருவான 'தினத் தந்தி' மென்மேலும் வளர்ந்து பெருகிட வாழத்துகிறேன்."

கே. ஏ. மதியழகன்

ஒரு தமிழன், பத்திரிகையுலகில் சீருடனும் சிறப்புடனும் ஒரு பத்திரிகையை நடத்த முடியும் என்று நிரூபித்தவர் திரு. ஆதித்தனார்.

இந்த வெற்றி அவருக்கு மட்டுமல்ல --- தமிழ் நாட்டிற்கே சொந்தமானதாகும்.

பாமரரும் புரிந்துகொள்ளும் அளவில் ஓர் உன்னதமான ஏட்டை 25 ஆண்டுக் காலம் நடத்தி வெற்றிபெறுகிறார். இன்னும் பல்லாண்டுகள் அங்கு ஏடு சீருடனும் சிறப்புடனும் நடந்திட வாழத்துகிறேன்."

ஏ. கோவிந்தசாமி

"ஆதித்தனாரின் துணிவும் விடாமுயற்சியுமே 'தினத் தந்தி'யின் வெற்றிக்குக் காரணமாக இருந்தன.

எடுத்துக்கொண்ட முயற்சிகளில் வெற்றி பெறும் அவரது ஆலோசனையில் இயங்கும் 'தினத் தந்தி' பொன் விழாக் கொண்டாடி அதற்கு மேலும் இயங்கித் தொண்டாற்ற வேண்டும் என வாழ்த்துகிறேன்."

செ. மாதவன்

"'தினத் தந்தி' தமிழகத்தில் பெரும் செல்வாக்குப் பெற்ற ஏடாகத் திகழ்வதற்கு முக்கியக் காரணம் அதில் தரப்படும் தலையங்கமேயாகும். யாருமு மகிழும் வகையில் வெற்றி பெற்றிருக்கிறது 'தினத் தந்தி.' அந்த வெற்றி மேலும் சிறந்திட பணியாற்றுமாறு வாழ்த்துகிறேன்."

மா. முத்துசாமி

"தமிழ் மொழியில் ஆர்வம் உண்டாக்கிட முயன்றது 'தினத் தந்தி.'

சனநாயகத்தில் ஒரு மாறுதலை ஏற்படுத்தியதில் பங்கு பெறுவது அந்த ஏடு. இயலுள்ளது போல ஆந்திரத்திலும், கேரளத்திலும், கருநாடகத்திலும் ஏடுகள் துவங்கிட வேண்டும்."

எஸ். ஜே. சாதிக்பாட்சா

"பத்திரிகை உலகிலேயே ஒரு புரட்சியை உண்டாக்கியது 'தினத் தந்தி.' பாமரமக்களும் பத்திரிகை படிக்கவேண்டும் என்ற ஆவலைக் கிளறியது அந்த ஏடு. அது மேலும் பல வெற்றிகளைப்பெற்றிட வாழ்த்துகிறேன்."

சத்தியவாணிமுத்து

"சிறுவர் முதல் முதாட்டியர் வரை படிக்கத் தூண்டும் பத்திரிகை 'தினத் தந்தி'.

இன்று வெள்ளி விழாக் கொண்டாடும் இந்த ஏடு, நூற்றாண்டு விழாவும் கொண்டாடி அதற்கு மேலும் விழாக் கொண்டாட வாழத்துகிறேன்."

டாக்டர் மு. வரதராசனார்

"பெருவாரியான வாசகர்களைக் கொண்டது 'தினத் தந்தி' இன்னும் முயன்று ஒரு மூன்றுகோடி மக்களாவது படிக்கும் வகையில் அது வளரவேண்டும்.

தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டிற்கும் ஆபத்து வருகிற நேரத்திலெல்லாம் குரல் எழுப்பியது 'தினத் தந்தி'."

ம. பொ. சிவஞானம்

"சாமானிய மக்களும் விஷயஞானம் பெறச் செய்து, அதன் மூலம் சனாயகம் வளர உதவியது 'தினத் தந்தி' என்றால், அரசியல் கட்சிகளில் தி. மு. கழகத்துக்கே அந்தப் பெருமை சாரும்.

சாமானிய மக்களும் அரசியல் விவேகம் பெற்று, சட்டமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் இடம் பெறும்படிச் செய்து, மகத்தான சனநாயகப் புரட்சியை உண்டுபண்ணியது தி. மு. கழகம்.

தமிழ் மொழிக்காக -- மக்களுக்காக எந்த ஒரு முயற்சியாயினும் துணை நின்றது 'தினத் தந்தி'."

ஆதித்தனார்

நன்றி தெரிவிக்கும் வகையில் திரு. சி. பா. ஆதித்தனார் பேசுகையில் கூறியதாவது:—

"பத்திரிகை நடத்துவது என்றால் அதில் ஆர்வமும், தொண்டுள்ளமும் வேண்டும்.

இது ஒரு கெருப்பாறு; இத்தீயில் நீந்துவது மிகக் கடினம்.

இந்த விழாவில் எனக்கு நானே மன நிறைவை ஏற்படுத்திக் கொள்கிறேன்.

மதுரையிலே கையினால் செய்யப்பட்ட காகிதத்தில் அச்சிட்டபோது, அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் இத்தகைய விழாவொன்று நடக்கும் என்று யாரேனும் சொல்லியிருந்தால், நான், 'அது கனவு' என்றே சொல்லியிருப்பேன்.

ஆந்திரத்திலும், கருநாடகத்திலும், 'தினத் தந்தி' போல நாளிதழ் தொடங்க முடியும்; வெற்றிகரமாக நடத்தவும் முடியும். அண்ணா அவர்கள் ஆணையிட்டும் -- அதற்கான வாய்ப்புகள் அங்கே உள்ளன."

நடக்க இருப்பவை

30--8--68

பழங்காநத்தம்

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு அண்ணா திடலில்; தலைவர்: கி. முனியாண்டி; பேசுவோர்: கேரள சுந்தரம், கே. எஸ். சந்தானம், காவேரி மணியம் பி.எஸ்சி., பி.எல்., அ. பாலன், மற்றும் பலர்.

மாயூரம்

அண்ணா படிப்பகம்—கோ. சு. மணி படிப்பகம் ஆகியவை சார்பில் ஆர். ஜோசப் எம்.சி. அவர்களுக்குப் பாராட்டு; தலைவர்: ஜி. சீவரத்தினம்; பாராட்டுவோர்: என். கிட்டப்பா எம். எல்,ஏ., எஸ். கணேசன் எம். எல்.ஏ., ஏ.செங்குட்டுவன், தம்பி தேவேந்திரன் எம்.சி., கிருஷ்ணமூர்த்தி, மற்றும் பலர். (முருகு பாண்டியன் குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

திருச்சி

பாரம் சுமக்கும் தொழிலாளர் முன்னேற்ற சங்க சார்பில் மாலை 6-மணிக்கு தெயில ரோடில்; தலைவர்: ஐ. எம். ஷரீப்; பேசுவோர்: எஸ். இராகவானந்தம் எம்.எல்.சி., எம். எஸ். மணி எம்.எல்.ஏ., 'ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., எஸ். ஏ. ஜி. ராபி, எஸ். ஜி. கிருஷ்ணன், பி. தண்டபாணி.

நெய்வேலி மின்சாரம்

சென்னை, ஆக. 28—

நெய்வேலியில் உற்பத்தியாகும் மின்சாரத்தில், குறைந்தது எந்த அளவுக்கு மின்சாரத்தை தமிழக மின்சார வாரியம் எடுத்துக்கொள்ளும் என்று நெய்வேலி நிலக்கரிக் கார்ப்பரேஷன் இயக்குநர் குழு மின்சாரவாரியத்தைக் கேட்டிருந்த தாகவும், முழு அளவு மின்சாரத்தையும் எடுத்துக்கொள்ளவதாக மின்சார வாரியம் தெரிவித்திருப்பதாகவும், தொழிலமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சட்டமன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

WANTED

CHIEF ENGINEER

For SUGAR FACTORY

Applications, indicating age, Qualifications, Experience, pay drawn at present and expected, time required to join duty; if selected etc., are invited for the post of a Chief Engineer to reach the undersigned on or before 15-9-1968.

QUALIFICATION REQUIRED:

A degree in Mechanical and/or Electrical Engineering of any recognised University with 10 years experience in the erection and maintenance of Sugar Factory.

N. SRINIVASAN, B.A.,
General Manager,
THE KALLAKURICHI CO-OPERATIVE SUGAR MILLS LIMITED,
Moongilthuraipattu Post, (Via) Sankarapuram,
Kallakurichi Taluk (South Arcot District).

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்

12-வது ஆண்டு நினைவு நாள் விழா

★

30--8--68 மாலை 5-30 மணிக்கு

கிருஷ்ணகான சபா அரங்கில்

(இராகராயநகர் பிரிவுத் ரோடு—பனகல் பார்க் அருகில்)

தலைவர்: தமிழவேள் பி. டி. இராசன்

மாண்புமிகு அமைச்சர் மு. கருணாநிதி

இணை மேயர் பலவாவன்னன், மு. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., பி. கே. மூக்கையா தேவர் எம்.எல்.ஏ., டி. கே. சண்முகம் எம்.எல்.சி., டி. வி. நாராயணசாமி எம்.எல்.சி., வி. குழந்தைவேலு (முன்னாள் துணைப் போலீசு கமிஷனர்), த. பாண்டியன், சந்தானலால் நஞ்சுண்ட, எஸ். எஸ். தென்னரசு, டைரக்டர் பஞ்சு, டைரக்டர் ஏ. பீம்சிங், கே. ஆர். இராமசாமி, சந்திரபாபு, கோவிந்தராசுலு நாயுடு, கு. அழகிரிசாமி, கோமதி சுவாமிநாதன், டி. எம். ரகுநாதன், நிதாய் கோஷ், கே. கோர்னாம், ஜி. உமாபதி, டி. ஏ. மதுரம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

'திருவிருந்து' --- கிருஷ்ணமூர்த்தி பாகவதர்

—கலைவாணர் நிலையம்